Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி ௴ 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி௵ புரட்டாதி௴ ௨0௳ வெள்ளிக்கிழமை (5 OCTO 1956) [இல-௨௫]


## விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் வித்தியாசம் உண்டா?

மனிதர்களைப்பற்றி மிருகங்களும் பறவைகளும் என்ன நினைக்கின்றன. இத்தகைய கேள்வி தம் மனதிலே சில சமயங்களில் எழுந்ததுண்டு. அவைகளுக்குப் பேசும் சக்தி இருக்குமேயானல் அவைகள் தம்மைப்பற்றி எவ்விதம் வர்ணிக்கக்கூடும்என்பதுபற்றியும் தாம் சிந்தித்ததுண்டு. "பறவைகளும், மிருகங்களும் மனிதனைப்பற்றி வர்ணிக்கத் தொடங்கினல் அது மனிதனுக்குப் புகழ்ச்சி உரையாக இருக்குமா என்பது ஐயப்பாட்டிற்கு உரியதே. மனிதகுலம் நாகரிகமும், பண்பாடும் அடைந்தும், மனிதன் பல வழிகளில் இன்னும் மூர்க்ககுணம் உடையவனகவே இருக்கிருன்.

அதுமட்டுமல்ல, பயங்கரமானவை என்று கூறப்படும் விலங்குகளை விட அபாயகரமானவனகஇருக்கிருன் மனிதன்".

"மனிதன் ஒரு விநோதமான படைப்பு, நாகரிகமும், அநாகரிகமும், நல்லதும், கெட்டதும், தெய்வீகத் தன்மையும், இழிகுணமும் ஒருங்கே கொண்டவன் தான் மனிதன்".

"உயர்வான கொள்கைகள்பற்றி நாம் பேசுகிருேம். ஆனல் செய்கையில் அதை நாம் பின்பற்ருமல், பொய்யாக நடக்கிருேம். நாம் அமைதி பற்றிப்பேசுகின்ருேம். ஆனல் நாம் நடப்பதோ, யுத்த மனப்பான்மையிலும் ஆக்கிரமிப்புத் தன்மையிலும் இருக்கின்றது" என்று காட்டு விலங்குகளை ஏன் பாதுகாக்கவேண்டும் என்ற புத்தகத்தொடர்பில் பண்டிதநேரு அவர்கள் தமது கருத்தைத் தெரிவிக்கும் போது கூறினர்.

அர[illegible] அலை

# உள்நாட்டு மந்திரியின் உத்தரப் பிரதேச உளவு தரிசனம்!

———:0:———

## கல்வி நிலைமையைக் காணக் கருத்துக் கொண்டாராம்!!

### மக்கள் மனநிலையை மட்டுக்கட்ட முடியாத மந்திரியார்

"உள்நாட்டு அமைச்சரே சற்று ஊக்கங் கொள்ளுங்கள்; உத்தரப் பிரதேசத்தில் மாதம் மும்மாரி பெய்கின்றதா? தனிச்சிங்களத் தர்மம் பரவி வருகின்றதா என்று அறிவது அவசியம். ஆனல் வடபகுதி மக்கள் மனம் புண்ணுகிவிட்டதென்று அங்குள்ள தலைவர்கள் கூறக் கேட்டுள்ளேம். எனவே எக்காரியத்தையும் தந்திர யுக்தியாலேதான் இயற்றுதல்வேண்டும். வேவு விஜயம் சென்றுவாருங்கள்" இவ்வாறு கற்பித்தார் பிரதமர் உள்நாட்டு மந்திரிக்கு. அரசகட்டளைக்கு அமைந்தே ஆகுதல் வேண்டும், ஆகையால் அமைச்சர் வடதிசை நோக்கிப் புறப்பட்டார்.

மந்திரி வரவைப் பற்றிப் பரம இரகசியமா யிருந்தது என்றும் சொல்லமுடியாது. ஆனல் மந்திரியார் உலவும் இடங்கள் எவை என்ற செய்தி வெளியாய்விட்டது. உள்நாட்டு மந்திரி உலவ வேண்டிய நிலையங்கள் உள்ளன. அவற்றை அவ்வளவு கவனியாது அந்தத் தனிச் சிங்களச் சட்டத்தின் காரிருள் படிந்து விடுமோ என்று ஒன்றுமறியாது ஆலோசனையிலிருக்கின்ற கல்வி நிலையங்களைப் பார்வையிட்டால் என்னஎன்று உள்நாட்டு மந்திரிக்கு ஒரு யோசனை உதித்தது. இந்தச் செய்திதான் மக்கள் மனத்தில் ஐயுறவை எழுப்பியது.

தமிழ் மாநாட்டுத் தலைவர் திரு. G G. பொன்னம்பலம் அவர்களும் தமிழ் மாநாடும் (Tamil Congress) தமிழபிமானிகளும் யாழ்ப்பாண நகரசபைத் தலைவரும் மந்திரியாரை வரவேற்கக்கூடாது என்று தாமாகவே வழிகாட்டியதைக் கண்ட மேற்சபை அங்கத்தவர் திரு. ஜயசூரிய அவர்கள் கல்லூரிகளைக் காணப் போகும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டேன் என்று முடிவுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

இன்னும் ஒன்று குறிப்பிடத்தக்கது. தனிச்சிங்க

தொடர்ச்சி 5-ம் பக்கம்

## வண் மேற்கு ஸ்ரீ விசுவேசப்பிள்ளையார் கோவில்

மேற்படி கோவில் பரிபாலன சபையின் பதினொராவது வருடாந்தக் கூட்டம் 16-9-56 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மேற்படி கோவில் மண்டபத்தில் திரு. அ. விசயரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்ற பொதுக்கூட்ட அறிக்கை, காரியதரிசியின் வருடாந்த அறிக்கை தனதிகாரியின் வருடாந்த வரவு செலவுக் கணக்குகள் முதலியன சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

காரியதரிசி தனது வருடாந்த அறிக்கையில் கோவில் நித்திய நைமித்திய பூசைகள் முதலியன விதிப்படி ஒழுங்காக நடைபெறுகின்றன என்பதைக் குறிப்பிட்டார்.

அடுத்தபடியாகப் பதினேழு அங்கத்தவர்களைக் கொண்ட 1956—1957-ம் வருட உத்தியோகத்தர் தெரிவு பின்வருமாறு:—

தலைவர் திரு. அ. விசயரத்தினம், அதிபரும் தனதிகாரியும் திரு. க. துரைச்சாமி, கௌரவ காரியதரிசி திரு. தி. செல்லத்துரை B.A.

மக்கள் மொழிக்கு மானபங்கம் வருவித்த மந்திரிசபை அங்கத்தவரை —

# வரவேற்கமாட்டோம்

## சமஉரிமை வழங்கிய பின்

### சகோதர பான்மையில் வந்து போகலாமே!

**உள்நாட்டு மந்திரியார், மேற்சபை அங்கத்தவர் ஸ்ரீ A. P. ஜயசூரியஅவர்கள் யாழ்ப்பாணப் புகைவண்டி நிலையத்தின் உள்ளே கால் வைத்ததும் "தமிழ் மொழியைத் தாக்கிய மந்திரிசபை அங்கத்தவரே! இன்னும் தவறு செய்யாது தயவு செய்து திரும்பிச் செல்லுங்கள்!! என்று ஆரவாரம் எழுந்தது.**

ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண முற்றவெளியிலே தமிழ் மாநாட்டுத் தலைவர் திரு. G G. பொன்னம்பலம் தலைமையில் நடந்த மாபெருங்கூட்டத்தின் 'மந்திரி வரவு எதிர்ப்பு'த் தீர்மானத்தின் எதிரொலிதான் இவ்வாறு எழுந்தது.

அமைதியாக — ஆனல் நியாயமான நெறிமுறையாக ஆயிரக் கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். மாகாண அதிபதியின் அலுவலகத்து முன்றிலிலும் பெருந்திரளான மக்கள் கூட்டம் அவ்வண்ணம் ஆர்ப்பாட்டஞ் செய்தது. திரு. பொன்னம்பலமும் யாழ்ப்பாண நகரத் தலைவர் திரு S. S. நவரத்தினமவர்களும் உள்நாட்டு மந்திரி கல்லூரிகளைத் தரிசித்தல் மக்கள் விருப்பத்துக்கு மாருனது என்று எடுத்துக் காட்டினர்.

உடனே திரு. ஜயசூரியா கல்லூரித் தரிசனம் கைவிடப்பட்டதாக அறிவித்தல் செய்தார்.

### மந்திரியாரின் மறுமொழி

வடபகுதியில் அதிசயிக்கப் படத்தகக விதமாக மேம்பாடடைந்து வரும் கல்வி வளர்ச்சியைப் பார்வையுறுவதற்காகவே கல்லூரிகளைத் தரிசிக்க எண்ணினேன். கல்வி நிலையங்களுடன் பல காலம் தொடர்புள்ளவனுகையால் கல்வி சம்பந்தமான காரியங்களைக் கருதுவது எனக்கு இயல்பாயமைந்துவிட்டது. வேலையில்லாமை நெருக்கடியாய் வருவதை நோக்குமிடத்து குடிசைக் கைத்தொழில்முதலியவற்றை விருத்தி பண்ணும் எனது திட்டத்திற்கு வழி காண்பதற்குக் கலாசாலைகளைப் பயன் படுத்தலாமா என்று பார்க்க விரும்பினேன்.

யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் இந்தவிதமான எண்ணத்தை யான் பூர்த்திசெய்வதற்குத் தடையான எதிர்ப்பை மாணவர் மத்தியில் ஆரம்பித்து வைத்திருப்பதால், யான் கல்லூரிகளைத் தரிசிப்பதால் மாணவர்களுக்கும் கல்லூரி அதிபர்களுக்கு மிடையே சின்னஞ்சிறு சச்சரவுகளாவது தோற்றுவதற்கு நான் காலாயிருக்க விரும்பவில்லை எனவே யாழ்ப்பாணத்தொகுதியிலே கல்லூரிகளைத் தரிசிக்கும் எண்ணத்தை நான் கைவிடுகின்றேன்.

நகரத்திலுள்ள கடைகள் மூடப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகள் மந்திரி வரவில்மக்களுக்குண்டான வெறுப்பைக் காட்டின.

## கல்லூரி அதிபர்கள் கழக நிர்ணயம்

திரு. எஸ். எச். பேரின்பநாயகம் அவர்களின் தலைமையில் நடந்த வடமாகாணத் தலைமை ஆசிரியர் சங்க விசேட கூட்டத்தில் போதனு மொழி, பிறமொழிப் பாடம், அரசாங்கத்துடன் கடிதப் போக்குவரத்து எம் மொழியில் என்பனபற்றிப் பிரேரணைகளின் மூலம் சில தீர்மானங்கள் செய்யப் பெற்றன. அவை சிங்களவருக்குச் சிங்களம் எப்படியோ அப்படியே தமிழருக்குத் தமிழ் பிரதானமாகும். ஆகையினலே தமிழ்ப் பிள்ளைகளுக்குப் போதனு மொழி தமிழாதல் வேண்டும். ஆகவே பரீட்சைகளும் தமிழில் நடக்கவேண்டும்.

அரசாங்க சேவை உறுப்பினரைத் தெரிவதில் தமிழ்ப் பிள்ளைகளுக்கு மற்றத் தேசிய மொழியில் ஒரு பாடம் வைத்து அவர்களைப் பிரதிகூலமான நிலைமையில் வைக்கக் கூடாது. இது தமிழ்ப் பிள்ளைகளல்லாதாருக்கு வைக்கப்படாத கட்டுப்பாடென்பது கவனிக்கவேண்டும்.

அரசாங்கத்துடன் தமிழ் மொழியிலேயே கடிதப் போக்குவரத்துச் செய்யும் மாற்ற முடியாத உரிமை தமிழருக்குஇருத்தல்வேண்டும்.

மற்றொருசாராரின் மொழியைக் கல்லாததனுல் இந்நாட்டுக் குடியியல் அரசியல் வாழ்க்கையில் தமிழமக்கள் பரிபூரணமாக ஈடுபடும் வசதி மறுக்கப்படுதல் கூடாது என்பனவாகும்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். துர்முகி ஞு புரட்டாதிமீ உ0உ வெள்ளிக்கிழமை


## வேடம் போடுவது வினையாய் முடியும்!

பூமாலை சூடிப் பாமாலை பாடி மகர தோரணங்களுடன் வரவேற்பு உபசாரம் வைக்கும் வழக்கத்தைப் பழக்கத்தாலே தொழிலாகக் கொண்ட சிலருக்கு காலம் இடம் சூழ்நிலை அறிந்து காரியஞ் செய்யும் ஆற்றல்இல்லாமை இயற்கையே. இவர்கள் வள்ளுவர் வாழ்க்கை வழி நூலில்,

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்துவிடல்'

என்று கூறப்பட்டிருப்பதைக் குறிப்பாக எடுத்துக் காட்டி ஆறுதல் அடைந்து கொள்வதும் வழக்கம். இன்னா செய்தாருக்கு நன்னயம் செய்தல் அன்னாருக்கு உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசி வெற்றுரை பகர்ந்து வேடிக்கைக்காக விருந்தளித்து உபசரிப்பதன்று. இவ்வகையான விபரீதச் செயலால் அவர்கள் நாணமடைய மாட்டார்கள். நயவஞ்சகத்தைக் காணும்பொழுது இன்னும் இன்னா செய்யும் எண்ணம் எழுந்த வண்ணமாயிருக்கும். இடையூறு இழைத்தவர்கள் வெட்கித் தலை குனிந்து செய்த பிழையை உணர்ந்து சித்தந்தெளிவதற்கு நயஞ் செய்தல் வேண்டுமேயானல் அவர்கள் முன்னிலையிலே உண்மை நிலையைக் காண்பித்தல் வேண்டும்.

தனிச் சிங்களச் சட்டம் புகுத்தித் தமிழினத்தையும் தனிப் பெரும் புகழ் படைத்த தமிழ் மொழியையும் ஒருங்கு அவமதித்து ஆற்றெணுத் தீங்காற்றிய மக்கள் ஐக்கிய முன்னணி மந்திரி சபைக்கு தமிழகத்தின் உள்ளக்கிடக்கையைத் தன்மான உணர்ச்சியை மனச்சான்றுக் கிணங்க உள்ளபடி எடுத்துக் காட்டுவதை விட்டு, வடபகுதி மக்கள் தாய் மொழி என்ற மானம் போன பின்பும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வர மான பங்கஞ் செய்தவர்களை மகிழ்வித்துத் தானங் கேட்கும் விபரீதத்தில் ஈடுபடுவார்கள் என்ற தோற்றத்தை உண்டாக்குவது மனிதகுலப் பண்பாட்டுக்கே நாணத்தை வருவிப்பதாகும்.

முன்னொருகால் முதல் அமைச்சர் கொத்தலாவலை

அரசியல்

# அசம்பாவிதங்களும் அநர்த்தங்களும்

## தமிழுக்குச் சம மரியாதை

என்கிறார் வரவேற்புப் பெற வாடி வதங்கும் மந்திரியார்!

—0—

## சிங்களம் கட்டாயப் பாடம்

என்கிறது அரசாங்கத் தீர்மானம்?

**நாடகம் ஆடத் தொடங்கிவிட்டால் முழுவதும் வேடம் என்பதை யாவரும் அறிவர் 'அரசியல் நாடகத்தில் இது வரவர உண்மைப்படுத்தப்படுகின்றது!**

மந்திரியார் ஜயசூரிய வடபகுதிக்கு வந்தார். கண்டார்; தோல்வியை யுணர்ந்தார். யாழ்ப்பாணத்துப் பிரதம கல்லூரிகளைத் தரிசிப்பதென எண்ணியதைக் கண்ணியமாய்க் கைவிட்டார்.

எங்கே மாலை போடலாம், யாருக்கு மாலை போடலாம்; வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கலாம் செய்தித்தாட்களிலே பெயர் பெறலாம் என்ற வகையிலே சிலர் இருக்கின்றார்கள் என்பதை அறிந்திருக்கின்றார் மேற்சபை அங்கத்தவர் திரு. ஜயசூரியா. ஆகவே அந்த விதமாக ஒருவரவேற்புப் பெற்றுவிடலாம் என்று நினைத்தே வடபகுதி விஜயத்தைத் திடமாகச் செய்தனர். ஆனல் யார் அவரை வரவேற்றார்கள்.

அரசாங்கத்துடன் நன்மைக்கோ தீமைக்கோ — வெற்றிக்கோ விளையாட்டுக்கோ ஒருங்கு சேரமாட்டோம் என்றிருந்தவர்கள் இடதுசாரிகள். அதே இடதுசாரிகள்தான இப்பொழுது வரவேற்புஅளிப்பதிலும் விருந்துகளிற் கலந்துகொள்வதிலும் ஆவலாகிவிட்டார்கள்.

வட நாட்டிற்கு வந்தபொழுது மலைபோல மாலை குவித்து நிலை தடுமாறி வரவேற்றதன் காரணமாக உள்ளம் கொள்ளை போகத் திற் அன்னர் தமிழையும் அரசகரும மொழியாக்குவதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றி அமைப்பேன் என்று உறுதிமொழி கூறியதும் பின் தென்னிலங்கை சென்றதும் தமது மனச்சான்றுக்கே மானபங்கத்தைச் செய்து தனிச் சிங்களச் சட்டம் வேண்டும் என்று களனியாற்றங் கரையில் மொழித் துரோகத்துக்கு வழியெடுத்ததும் இந்த வரவேற்பு விரும்பிய சிலருக்குப் பழங் கதையாய் விட்டனவா?

வட பகுதி மக்களின் தேவைகளை அறிவதற்கு வந்தேன் என்று கூறிய உள்நாட்டு மந்திரியின் மனத்திடந்தானென்னையோ? உயிரினும் பெரிதாக மதிக்கப்படும் தாய்மொழிக்கும் தாயகத்திற்கும் வன்கண்மையாக நீதிநெறிக்கு மாருக மனிதச் சால்புக்கு விரோதமாக அவமானம் வருவித்து அட்டூழியம் செய்தபின்பு ஒதுக்கப்பட்டவர்களிலே இன்னும் உயிர் இருக்கின்றதா என்று பார்ப்பதற்காகவா உள்நாட்டு மந்திரி இங்கு வந்தார் என்று கேட்கின்றோம்.

கனவிலும் இன்னது
மன்றோ வினைவேறு
சொல்வேறு பட்டார்

தொடர்பு.

அரசியல்அநர்த்தம்-முதலாவது

தமிழுக்குக் **கண்ணியமான** மரியாதை செய்வோம். மொழிப் பாரபட்சம் என்பது எங்களிடம் கிடையாது என்றாராம் — வதிரியில் நடந்த வைபவத்திற் கலந்த தனிச்சிங்களச் சட்டம் வகுத்த மந்திரி சபை அங்கத்தவர் திரு. ஜயசூரியா.

அசம்பாவிதம் —முதலாவது

அரசாங்கசேவைக்கான தேர்வுகளுக்குச் சிங்களம் கட்டாய பாடமாகும் என்கிறது ஒருசெய்திஅறிக்கை.

அரசகரும மொழிப் பகுதி அதிபர் அந்தத் தீர்மானத்தை எவ்விதமாகவும் மாற்றலாம் என்கிறது அதே செய்தி அறிக்கை.

அநர்த்தம் —இரண்டாவது

தமிழ் மொழி — தங்கள் உயிர். தமிழினத்துக்கு அவமானம் வருவித்த அரசாங்கத்துடன் ஒத்துழைக்கமாட்டோம் அரிசி விலை குறைக்காத அரசாங்கத்தை வீழ்த்துவோம் என்ற இடதுசாரிக் கட்சியினர் இன்மேல் தமிழ் மொழிக்காவது பொருளாதாரப் புரட்சிக்காவது பாடுபடுவார்களா என்பது.

அநர்த்தம் — இரண்டாவது.

இன்னும்பல உள. பின்னர் வெளி வரும்.

கன்னித் திங்களில்

## அகிலாண்ட அன்னைக்கு ஆராதனை

புரட்டாதி 20 உ வியாழன்
நவராத்திரி பூஜாரம்பம்
—0—0—

கமலந்தனிலிருப்பாள்விருப்போடங்கரங்குவித்துக்
கமலங்கடவுளர்போற்றுமேன்பூவைகண்ணிற்கருணைக்
கமலந்தனைக்கோண்டுகண்டோருகாற்றுங்கருத்துள்வைப்பார்
கமலங்கழிக்குங்கலைமங்கையாரணிகாரணியே.

# மாணவர் ஒழுக்கம்

—:0:—

## உண்டாக்கும் வழி என்ன?

"நாம் அரும்பாடு பட்டு அடைந்த ஐக்கியத்தை ஏதாவது ஒரு காரணம் காட்டி அழிப்பதற்கும் அதன்மூலம் நாம் மிகவும் விரும்பும் சுதந்திரத்திற்கு ஆபத்து விளைவிக்கவும் முற்படும் சக்திகளை வளரவிடாமல் தடுப்பது இந்தியாவில் உள்ள இளைஞர்கள் அனைவரின் புனிதமான கடமையாகும்"

நமது சுதந்திரம் நமது ஐக்கியத்தைப் பொறுத்ததேயாகும் என்பதை மாணவர்கள் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும. அந்த ஐக்கியத்தை இழந்துவிட்டால் சுதந்திரம் பயனற்றதாகி விடும்.

மொழிச் சிக்கல் பற்றிப் பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து நாட்டில் வருந்தத்தக்க பிளவு ஏற்பட்டிருக்கிறது. விடுதலை இயக்கம் நடைபெற்றபோது நாட்டில் இந்திய மொழிகள் பெரும் சக்திகளாக விளங்கின என்பதில் சந்தேகமில்லை.

அனுபவமும் மாறுபட்டு வரும் சூழ்நிலைகளும் மக்களின் உள்ளத்தில் மாறுதல்களை ஏற்படுத்த வேண்டும். ஒருநேரத்தில் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் சரியானவை என்று கருதப்படுபவை மற்றொரு சமயத்தில் வேறு விதமான சூழ்நிலைகளில் சரியானவை என்று கருதப்படவேண்டிய அவசியமில்லை.

வேலை பெறுவதற்காக மட்டும் கற்கும்கல்வி பயனற்றது என்பதை உணரவேண்டும். வேலை தேடுவதினின்றும் கல்வி தனியாக வைக்கப்படவேண்டும். பல்கலைக் கழகங்களுக்கு நாம் அறிவையும், பண்பாட்டையும் பெறுவதற்காகச் செல்ல வேண்டும். அத்தகைய நோக்கம் உள்ளவர்கள்தான் பல்கலைக் கழகங்களுக்குச்செல்லுதல் வேண்டும. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இல்லாததே மாணவர்களிடையே ஒழுக்கமின்மை பெருகியதற்குக் காரணமாக இருக்கின்றது என்று பூனு பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் சென்னைத் தேசாதிபதி ஸ்ரீ பிரகாச அவர்கள் பேசும்போது கூறினர்.

### அங்கே வாட்டுமாம்!


வடபகுதிக் கல்லூரி அதிபர்கள் யாவரையும் கல்வி மந்திரி ஸ்ரீ தகநாயக கொழும்புக்கு வரும்படி அழைத்திருக்கின்றாராம். ஏன்? கல்விப் பிரச்சினைகள்பற்றி ஆலோசிக்க வேறு நியாயம் கூற அவர் விரும்பவில்லையாம்.

காந்திப்பெரியார் —கனவாகமாட்டார்

# நினைவு வாரம்

மகாத்மா என்று கூறினல் காந்திப் பெரியார் ஒருவரையே குறிக்கும்.

அரசியலில், அறவியலில், ஆத்ம இயலில், அன்பியலில் இந்த உத்தமர் —
பத்தரை மாற்றுத் தங்கம்...!



# சர்வகலாசாலை மாணவர்

## ஒழுக்கச் சிதைவும் நீக்கும் வழியும்

சர்வகலாசாலைகளில் அளவு கடந்து மாணவர் தொகை மிகுதல் பற்றியும் அதனுல மாணவரின் ஒழுக்கமுறை சீர் கெடுதல்பற்றியும் உதகல் சர்வகலாசாலை உபவேந்தர் கலாநிதி பி. பரிகா அவர்கள் சில ஆழ்ந்த கருத்துக்களைத் தமது பேச்சொன்றில் எடுத்து விளக்கினர்.

அவர் பேசும்போது மாணவர் மத்தியில் ஒரு அளவு ஒழுக்க மின்மை நிலவுகின்றதென்பது வெளிப்படையாகப் புலப்ஓர் உண்மையாகும். அத்துடன் வித்தியா விஞேதக் குழப்பங்களும்உள. இங்கே இப்பொழுது இத்தொடர்பிற் பேசுவதன் நோக்கம் இந் நிலைமைக்குக் காரணம் என்ன என்றறிந்து அவற்றை நீக்கும் வழி வகைகளை வகுப்பதாகும். இந் நிலைமையை ஆராயத்தொடங்க முன், மாணவர் ஒழுக்கமின்மையின் மேற்பரப்பிற் காண வருவதையும் அடிப்படையில் உண்மையான ஏதுவாயிருப்பதையும் பிரித்தறிதல் முறையாகும். ஒழுக்க மின்மையாகக் காணவருவது பெரும்பான்மையும் ஓர் அற்ப கால நிகழ்ச்சியாயிருந்து மறைகின்றது. நாட்டில் ஓர் அரசியற் கிளர்ச்சியோ சமூகக் கிளர்ச்சியோ உண்டாகின்றது; அது ஒரு சமூகத்தை அல்லது நாடு முழுவதையும் மிக வேகமாகக் குழப்புகின்றது. அப்பொழுது சமூகத்தின் ஒரு பகுதியினராகிய மாணவர் தாம் சரியென நினைக்கும் சில செயல்களைச் செய்கிறார்கள். அவை ஒழுக்கமின்மையின் பாற்பட்டனவாகக் காண வருகின்றன. அப்படிப்பட்டசெயல்கள் அற்பகால ஆயுளுடையவையாகலின் அவைபற்றி நாம் இங்கேசிந்திக்கவேண்டியதில்லை. சமூகததிலுண்டாகும் நிகழ்ச்சித் தாக்கல்களினல் மாணவர் தாக்கப்படாது புறம்பாக வைததுப் பாதுகாக்கப்படல் வேண்டுமென்று ஒருவர் கருதினல் அவர் உண்மையை உணராதவராகின்ருர்.

அப்படிப்பட்ட அற்ப கால நிகழ்ச்சிகளை ஒரு புறம் விட்டுப் பார்க்கும் பொழுதும் மாணவர் மத்தியில் உண்மையான ஒழுககமின்மை அடிப்படையில் மறைந்திருப்பதாக நான் கருதுன்கிறேன். சர்வகலாசாலை விதிகளை அவமதிப்பதிலும், தனிப்பட்ட ஆசிரியர்களின் தொடர்பில் தவருக நடந்துகொள்வதிலும் உரிமைகள் கடமைகள் என்பவைபற்றிப் பிழையான கருத்துக்கொண்டு அற்ப சாட்டுதலகளை ஏதுகளாகக் கொண்டு கழகச் சூழலில் குழப்பங்கள் உண்டாக்குவதிலும் உண்மையான ஒழுக்கமின்மை காண வருகின்றது. ஆகையினலே உண்மையை ஆராய்ந்து இத்தகைய அமைதியற்ற நிலைமைக்கு ஏதுக்கள் எவையெனக் காண்போமாக.

சாதாரணமான சமூகத் தகுதியுடைய மக்கள் தங்கள் நிலைமைகளில் சிறிது திருப்தியினமடைந்து விட்டால் அமைதியின்றி ஓர் அடங்காத நிலைமையை எய்துகின்றனர். இவ்வுண்மை மாணவருக்கும் ஒத்ததாகும். மாணவருலகில் இன்று காணும் பல பிழைகளுக்கு மேலே குறிப்பிட்ட திருப்தியீனங்களே காரணமாகின்றன. சர்வகலாசாலைக் கல்வி கற்பதிற் பெரு விருப்பொன்றிருப்பது சமூகத்திற் காண வருகின்றது. அக் காரணத்தால் சர்வகலாசாலைகளில் மாணவர் தொகை அளவுக்கடங்காது மிகுந்துவிட்டது. சர்வகலாசாலைகளிற் குறிப்பிட்ட மாணவர் மிகுதிக்கு அறிவு பெருக்கும் ஆர்வமோ அல்லது சர்வகலாசாலைப் பட்டத்தை உதவியாகக் கொண்டு உத்தியோகம் பெறும் வசதியைக் கூட்டுவதோ உண்மையான நியாயமென்று திடமாகச் சொல்ல முடியாது. பிந்தியது கூடுதலாயிருக்க ஒரு போது இவையிரண்டும் காரணமாயிருக்கலாம்.

ஆகையினலே சர்வகலாசாலைக் கல்வி கற்பதற்கு வேண்டிய ஆரம்பக்கல்வித் தகுதி இன்மையினலோ அல்லது தகுதி வாய்ந்த மனப் பண்பாடின்மையினலோ பெரும்பான்மையான மாணவர் சர்வகலாசாலைக் கல்வியாற் பெற வேண்டிய நன்மையைப் பெறுகின்றார்களில்லை.

இத்தகைய மாணவரால் சர்வகலாசாலைப் பரீட்சைகளிற் சித்தி பெருதோர் தொகை கூடுகின்றது. இவ்வாறு பயனற்ற முயற்சி செய்வதனல் சமூகத்தின் ஆக்கச் சக்தி குன்றுகின்றது. பரீட்சையிற் பெரும்பான்மையோர் சித்திபெருமையால் சாதாரண மாணவர் மனத்தில் ஓர் தோல்வி உணர்ச்சி உண்டாகிக் கல்வி கற்பதில் அவர்களின் ஊக்கம் குன்றிவிடுகின்றது.

இந்தத் தோல்வி உணர்ச்சியோடு மாணவர் தொகைக்குத் தக்க ஆசிரியர் தொகையின்மையும் மாணவரின் கல்வி ஊக்கம் குன்றுதற்கு ஏதுவாகின்றது. இருநூறு மாணவர்கள் உள்ள வகுப்புகளிருப்பதையும் நாம் நன்கு அறிவோம். அத்தகைய பெரிய வகுப்புகளில் ஆசிரியர் மிகுந்த தகுதியுடையவராயிருந்து இயல்பாகவே ஏற்கப்பட்டுக் கேட்கச் செய்யும் பொருள் செறிந்து சக்தி வாய்ந்த பேருரைகள் நிகழ்த்தப்படாவிட்டால் மாணவரின் மனங்களைக் கவர்தல் முடியாது. அப்படிப்பட்ட வகுப்புகளில் மாணவரைத் தனிப்பட்ட முறையிற் கவனித்தல் எவ்வாற்ருனும் முடியாது. ஆகையினலே ஆசிரியர் மாணவர் தொடர்பைத் தனிப்பட்ட முறையில் உண்டாக்கும் பொருட்டு வகுப்புகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வகுப்புக்களிலேயே ஒரு ஆசிரியருக்கு பதினறு மாணவர் விகிதமிருக்கின்றனர். இது சிறிதும் திருப்தியான ஒழுங்கல்ல. சில நேரங்களில் அத்தகைய வகுப்புகள் நேரசூசிகைப்படி நடப்பதேயில்லை. அப்படி ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் இருக்க வேண்டிய தொடர்பு இல்லாமற் போகின்றது.

## இந்திய மாகாணப் பிரிவு

பொதுவாக அரசாங்கம் திருத்தியமைக்கும் சட்ட படியும் குறிப்பாக பீகார், மேற்கு வங்கக் கைமா தற் சட்டத்தின்படியும் 1-11-56ல் இந்தியா 14 மாகாண அரசாங்கங்களையுடையதாயிருக்கும். இவற்றுடன் ம திய அரசாங்க ஆட்சியில் ஆறு பகுதிகள் நிலவு அவை, அந்தமான் நிக்கோபார் தீவுகள், தெல் இமாசலப்பிரதேசம், இலக்கைத்தீவு, அமினி தீவுக மணிப்பூர், திரிபுரம் என்பனவாகும். ஏ. பி. சி. என் பாகுபாடும் இராசப் பிரமுகர் பதவியும் நீக்கப்படு

மாகாண விபரம் பின் வருமாறு

| மாகாணம் | சதுரமைல் அளவு: | குடிசன (கோடி |
|---|---|---|
| 1. ஆந்திரப்பிரதேசம் | 110,250 | 32.2 |
| 2. அசாம் | 84,924 | 9,0 |
| 3. பீகார் | 67.8ε0 | 38.93 |
| 4. பம்பாய் | 188,240 | 47 8 |
| 5. ஜம்மு - காஷ்மீர் | 92,780 | 4.4 |
| 6. கேரளம் | 14,980 | 13 6 |
| 7. மத்தியப் பிரதேசம் | 171,200 | 26 1 |
| 8. சென்னை | 50.170 | 30 0 |
| 9. மைசூர் | 72,730 | 19 0 |
| 10. ஒரிசா | 60,140 | 14,6 |
| 11. பஞ்சாப்பு | 46,616 | 16,0 |
| 12. இராஜஸ்தான் | 132,300 | 16,0 |
| 13. உத்தரப் பிரதேசம் | 113,410 | 63,2 |
| 14. மேற்கு வங்களம் | 33,279 | 26,16 |

# யாழ்ப்பாண நகரசபை

## சுகாதார வைத்திய வருமானப் பிரேரணைகள்

மக்களின் சுகாதாரத்துக்குப் பாதகமானவற்றை நீக்கிச் சாதகமானவற்றைச் செய்து வைத்திய வசதிகளுடன் வருமானமும் நகரசபைக்கு வரச்செய்யும் பொருட்டு நான்கு பிரேரணைகள் முதலியார் செ. முத்துத்தம்பி அவர்களாற் பிரேரிக்கப்பெற்று முறையே திருவாளர்கள் கே வி. தேவேந்திரன், ஏ. நடராசா, ஏ. துரைராசசிங்கம் (கடைசி இரு பிரேரணைகள்) அனுவதிக்கப்பெற்று யாழ்ப்பாணம் நகரசபையில் நிறைவேற்றப்பெற்றன. அவை பின்வருமாறு:—

பெரியகடைக்கணித்தாக வுள்ள வண்ணான் குளம் சுகாதார முறைகளுக்குப் பொருத்தமில்லாத முறையிலிருப்பது கண்கூடு. இக் குளத்தின் அசுத்த நீரில் புடவைகள் வெளுக்கிறவர்கள் தங்கள் தொழிலை நாளிலும் பொழுதிலும் செய்து வருகிருர்கள். இதனல் மக்களுக்குப் பெரிய ஆபத்து விளையக்கூடும். மாநகர சபை இதைக்கண்டும் பராமுகமாயிருப்பது முறையன்று. ஆனதினல் இக் குளத்தை ஆழமாக்கி, சேறெடுத்து, படிக்கட்டுகள் சுவர்கள் கட்டி பரிசுத்தமான முறையில் வைக்க வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது.

வண்ணான் குளத்தின் மேற்குப்பக்கத்தை 30 அடி வரை நிரப்பி கஸ்தூரியார் ரேட்டில் 15 கடைகள் கட்டி வாடகைக்குக் கொடுக்கலாம். அதுபோல் வடக்குப்பக்கத்தில் ஸ்ரான்லி ரேட்டில் 5 கடைகள் கட்டி வாடகைக்குக் கொடுக்கலாம். ஒரு கடை கட்டிக் கொடுப்பதற்கு ரூபா 5000 பிடிக்குமென மதிப்பிடப் படுகிறது. 20 கடைகளுக்கும் ஒரு லட்சம் ரூபா பிடிக்கும். ஒரு கடை குறைந்தது மாதமொன்றுக்கு ரூபா 100 க்கு வாடகைக்குக் கொடுக்கமுடியுமென்று உத்தேசிக்கப்படுகிறது. 20 கடைகளுக்கும் ஒரு வருடத்தில் ரூபா 24000 வருமானம் வரக்கூடும். 10 வருஷத்தில் ரூபா 240,000 வருமானம் வரக்கூடும். ஆனதினல் மத்திய அரசாங்கத்திடம் ரூபா 100000 கடன் எடுத்து மேற்குறித்த கடைகளைக்கட்டி வாடகைக்குக் கொடுக்க வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது.

14-ம் வட்டாரத்தில் ஆரியகுளத்தடியி லிருக்கும் 2 பகிரங்க மலசல கூடங்கள் கொஞ்சமும் பொருத்தமில்லாதவிடத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. ஆதியில் இவைகளைக் கட்டும் பொழுது சுற்றவரவிருக்கும் மக்களைக் கலந்து விச ரிக்காமல் செய்யப்பட்ட என்று சொல்லப்படுகிற சூழவிருக்கும் மக்கள் இ மலகூடங்களிலிருந்து வரு துர்க்கந்தம் தாங்க முடிய மல் அவஸ்தைப்படுகிரு கள். ஆனதினல் இம்ம கூடங்களையிடித்து, அந்த சாமான்களையெடுத்து கொண்டு போய், ஆரி குளத்தின் வடபுறத்தி பொருத்தமானவிடத்தி இரு மலகூடங்களை அமை க்கவேண்டுமென்று இ சபை தீர்மானிக்கிறது.

மாநகரவெல்லைக்கு அரசினர் சித்த ஆயு வேதக்கல்லூரி, 200 நோய ளிகள் தங்கியிருந்து வை தியம் செய்விக்கக் கூடி வைத்தியசாலை (ஆசுப்ப திரி) வெளியிலிருந்து அ ருடு வரும் நோயாளர்க க்கு வைத்தியம் செய் வைத்தியசாலை, மருந்துக உற்பத்தி செய்ய ஔஷ சாலை, மூலிகைத்தோட்ட அமைத்துத் தரும்படி இ மாநகரசபை மத்திய அ சாங்கத்தைத் திரும்பவு திரும்பவும் கேட்டுக் கொ ளத் தீர்மானிக்கிறது.



# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடர்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 7—10—56 —— 13—10—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

உம்முடைய முயற்சிகளில் நீர் இந்தவாரம் அதிக தாமசமின்றிச் சித்தி எய்தக்கூடியதா யிருக்கும். எதிர்ப்பு நீங்கிவிடும். ஞாயிறு பிற்பகல் திங்கள் செவ்வாய் உம்முடைய குடும்பக் கருமங்களைச் சிறிது கிலேகுலேக்கக்கூடும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

பணத்துறையில் ஒரு நல்ல வாரம், நீர் சில கடன்களைத் திருப்பி வாங்கக்கூடியதா யிருக்கும் புதன் வியாழனும் வெள்ளி காலையும் சில சந்தோஷ மில்லாத நிகழ்ச்சிகள் நடக்கக்கூடும். வார இறுதி திரும்பவும் நன்ருகும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

ஒரு நல்லவாரம். உம்முடைய பணச்சிக்கல்கள் நீக்கப்படும், குடும்பக் கருமங்களும் திருந்த வேண்டும். மனச் சமாதானமிருக்கமாட்டாது. கடைசி இருநாட்களையும் கவனமாய்க் கழிக்கவும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

சொந்தச் சிக்கல்கள் நீக்கப்படும். உம்முடைய எதிரிகளை நீர் நம்பச் செய்தல் இலகுவாயிருந்து உம்முடைய முயற்சிகளை நீர் விரும்பியபடி செய்யக்கூடியதாயிருக்கும் ஆனல் தேகசுகம் சிறிது நல்லாயிருக்கமாட்டாது.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம் 1ம் பாதம்.

வழக்கத்திலும் பார்க்க வேலை கூடுதலாயிருக்கும், வரவு செலவுகளைச் சமாளிப்பதில் வருத்தப்படுவீர். இனத்தவர்களுடன் சண்டைகளுக்குமிடமுண்டு. அபாயங்களைத் தவிர்க்கவும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஒரு நல்லவாரம். உம்முடைய கடமைகளை வருத்தமின்றி நடத்தக்கூடியதாயிருக்கும். தனலாபமும் புகழும் நிச்சயம்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

வேலை கூடுதலாயிருக்கும். ஆனல் போதிய பதிலுபகாரத்தை நீர் பெறமுடியாமலிருக்கும் இரகசியப் பகைவர் மூலம் இடைஞ்சல்களுக்குமிடமுண்டு. கந்தோரில் தொந்தரவுகள்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும், ஆனல் ஆபத்தான விளைவுகளுக்கு இடமில்லை

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

ஒரு நல்ல வாரம் உம்முடைய சொந்தச் சிக்கல்கள் பலவற்றை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும், புது முயற்சிகளிற் சித்தியும் நிச்சயம். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.

உம்முடைய திட்டங்களை நீர் இந்தவாரம் நிறைவேற்றக்கூடியதாயிருக்கும். நல்ல மாற்றங்களுக்கும் எதிரிகள் அழிவதற்கும் இடமுண்டு. உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

புகழும் கல்விச் சித்தியும் நிச்சயம். குடும்பக் கருமங்களும் ஒழுங்காக்கப்படும். தனலாபமும் நிச்சயம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

புதுமுயற்சிகளில் இலாபங்கள் நிச்சயம். மனம்கூடுதலான விழிப்பாகவும் சந்தோஷமாகவு மிருக்கும். சில மாற்றங்களுக்கு அல்லது பிரயாணங்களுக்கு அணிமையில் இடமுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

தேகசுகம் அதிகம்நல்லாயிருக்கமாட்டாது. குடும்பக் கருமங்கள் இன்னும் சிறிது காலத்துக்குத் தொடர்ந்து தளப்பமாயிருக்கும். பிதாவழி இனத்தவர் உமக்குச் சில துன்பங்களை உண்டாக்கக் கூடும்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணர்பண்ணை மேற்கு 207 K. K. S. ரோடு, **சோம மு. இராமநாதன்** அவர்களின் அடைவு கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி மீட்கப்படாமல் இருக்கும் இதன்கீழ் விபரிக்கப்படும் நகைகள் 20-10-56 சனிக்கிழமை காலை 10 மணியளவில் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| | 1954 | | |
| 3315 | மார்ச்சு 31 | 85 | சிறுப்பிட்டி கதிர்காமர் கார்த்திகேசு ஒரு சங்குப்பிறி இல்லாத சிகப்பு கல் தோடு சோடி 1 பின் கோர்க்கி 1 சிகப்பு கல் சிமிக்கி சோடி 1 |
| 4781 | சூன் 23 | 125 | மேற்படி மேற்படி செடிக் காப்பு சோடி 1 |
| 5521 | ஆகஸ்ட் 3 | 41 | நவாலி தெற்கு மனவல் மரிசலின் கெமி, நீலக்கல் பெண்டன் 1 |
| 5794 | ,, 17 | 20 | புங்குடுதீவு கிழக்கு அப்பாச்சிப்பிள்ளை கந்தையா பெட்டி மோதிரம் 1 |
| 5982 | ,, 26 | 21 | மணிப்பாய் 4ம கட்டை A. V. எட்வேட் ராசா புருதாலி 1 |
| 5991 | ,, ,, | 20 | வேலணை கிழக்கு சுப்பர் சின்னத்தம்பி சிகப்புகல் தோடு சோடி 1 |
| 6291 | செப்டம்பர் 9 | 10 | கொட்டடி பீச்சுரோட் கந்தன் மார்க்கண்டு வெகல் கிளாவர்குச்சு சோடி 1 |
| 7196 | நவம்பர் 2 | 35 | ஸ்ட்டான்லிரோட் 23,2 குமாரசாமி சிதம்பரநாதன் மூன்றுகல்மோதிரம் 1 கல் டைய்மன் மோதிரம் 1 |
| 7857 | டிசம்பர் 15 | 20 | கச்சேரிரோட் 97 முத்தையர் சிவஞானம் கல் எஸ் மோதிரம் 1 |
| | 1955 | | |
| 8515 | ஜனவரி 21 | 15 | ஸ்ட்டான்லிரோட் 23/2 குமாரசாமி சிதம்பரநாதன் ஒரு வெ கல் மோதிரம் 1 |
| 8529 | ,, 22 | 15 | கொக்குவில் பாதிரிகோவிலடி செல்லையா நவரெத்தினம் நீலக்கல் மோதிரம் 1 |
| 8644 | ,, 29 | 10 | தாவடி கந்தர் பொன்னர் முறிவு எஸ் மோதிரம் 1 |
| 8761 | பிப்ரவரி 5 | 10 | பூனகரி மட்டுவில்நாடு கதிரவேலு மார்க்கண்டு ஒரு கல்இல்லாத வே கல் தோடு சோடி 1 |
| 8840 | ,, 11 | 40 | செம்மாதெரு ஒழுங்கை 29 துரைச்சாமி ஆசாரி செல்லம் ஆசாரி பெட்டி மோதிரம் 1 |
| 8858 | ,, 12 | 20 | சிவலிங்கப்புளியடி சின்னக்குட்டி அய்யாத்துரை தாலி 1 |
| 9087 | மார்ச்சு 1 | 25 | இந்துகொலுச்சடி சின்னப்பிள்ளை சின்னையா ராணிமுடி மோதிரம் 1 |
| 9106 | ,, 2 | 20 | பெருமாள்கோவிலடி சின்னப்பா குமாரசாமி பஞ்சாயுதம் 1 |
| 9950 | ஏப்பிரல் 28 | 35 | சுண்டிக்குளி 56/1 முருகேசு பாலசிங்கம் மஞ்சள் கல் மோதிரம் 1 |
| 9953 | ,, 28 | 30 | ஈச்சமோட்டை 54 சின்னையர் துரைநாயகம் செடிமோதிரம் 1 |
| 92 | மே 7 | 16 | கோணந்தோட்டம் கந்தையா சரவணமுத்து வெ கல் தோடு சோடி 1 |
| 515 | சூன் 4 | 10 | திருநெல்வேலி வடக்கு வேலுப்பிள்ளை தில்லையம்பலம் பிறவுண் கல் பெண்டன் 1 ஒரு கல்லும் சுரையுமில்லாத குச்சு சோடி 1 |
| 521 | ,, ,, | 12 | அத்தியடி பொன்னையா ஆய்யாத்துரை சிறு நெளி வளையல் 1 |
| 625 | ,, 11 | 20 | பாசையூர் முதலாம் குறுக்குத்தெரு குருசுமுத்து குசைப்பிள்ளை சிகப்பு கல் தோடு சோடி 1 |
| 866 | ,, 28 | 100 | உடுவில்கிழக்கு வேலுப்பிள்ளை சரவணமுத்து சுரை இல்லாத வளையல் சோடி 1 பிள்ளைக்காப்பு 1 வெ கல் மோதிரம் 1 |

விற்பனவு 20-10-56 சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை புறநீங்கலாக மீதி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

S. PASUPATHY CHETTIAR
Auctioneer, 25-9-56

M, 358, 28, 5-10-56

## தமிழ் மொழியின் தொன்மை

காரைக்கால் அம்மையார் கோயிலில் நடந்த சுவாமி விவேகானந்த வாலிபர் சங்க இருபதாம் ஆண்டு நிறைவுக் கூட்டத்திலே குன்றக்குடி அடிகள் தலைமை வகித்துப்பேசும்போது தமிழ் மொழி அரசாங்க ஆட்சி மொழியாதல் மாத்திரமல்ல அது ஆலயங்களில் ஆராதனை மொழியாதலும் வேண்டும் என்று குறிப்பிட்டபின் முதலாவது தமிழ்ச் சங்கம் ஏறக்குறைய 30,000 ஆண்டுகளுக்குமுன் உண்டாயிருக்க வேண்டுமென்று கூறினர். அது நிலவிய இடம் அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்குமிடையிலுள்ள நிலப்பரப்பா யிருந்திருக்கவேண்டுமென்றும் அது இப்பொழுது கடலுள் அமிழ்ந்திவிட்டதென்றும் இப்பொழுது உள்ள தமிழ்ச்சங்கம் அந்த முதற்சங்கத்தின் வழிவந்த பதினெட்டாவது சங்கமாகுமென்றும் மேலும் பேசும் போது கூறினர்.

## மலாயாவில் தமிழ்மொழி

மலாயா அரசாங்க ஆட்சி மொழிகளில் ஒன்ருகத் தமிழ் மொழி அமைக்கப்படுதல் வேண்டுமென்றும் சுதந்திர மலாயாவில் நிபந்தனை எதுவுமில்லாத முழுக்குடிஉரிமை சம சந்தர்ப்பம் என்பன தமிழ் மக்களுக்கு அளிக்கப்படவேண்டுமென்றும் மலாயாவில் வசிக்கும் தமிழ்மக்கள் தங்கள் சங்கங்கள் மூலமாக மலாயா அரசியற் சட்ட ஆராய்ச்சிக் குழுவைக் கேட்டிருக்கின்றனராம். அங்கே வசிக்கும் ஐம்பது இலட்சம் தமிழ்மக்களின் சார்பாயுள்ள 109 சங்கங்கள் ஒன்றுகூடி இவ்வாறு கேட்டிருக்கின்றன என்பது குறிப்பிடப்பட்டிருக்கின்றது

**சீனிச் செய்கைக்கு உதவி**

பனம் பதனீரிலிருந்து சீனி செய்வதற்கு உதவியாக ரூபா 175,000 கொடுக்க அரசாங்கக் கைத்தொழிற் பகுதி இயைந்துளளதாம்.

# சிவபரத்துவம்

—o—

## கீதையிற் காணும் விளக்கம்

(முற்றொடர்)

திருக்கைலாசம் சைவ சமயத்தவர்களுக்கு உயிர் நாடி போன்றது. அங்கு பரமேசுவரனும பரமேசுவரியும் வீற்றிருக்கிருர்கள். இயற்கைக் குன்றுகள் எல்லாம் தீப ஒளி போல் விளங்குகின்றன. அங்குள்ள ஆலய அமைப்புகளெல்லாம் எம் நாட்டில் காணப்படும் ஆலய அமைப்புப்போல் இயற்கையாய் அமைந்திருக்கின்றன. அங்குள்ள நீலநிறக் கற்கள் எல்லாம் உமையம்மையாரது செம்பவளத் திருமேனியோல் காட்சியளிக்கின்றன எனக் கச்சியப்ப சிவாசாரியார் கூறுகின்றனர். மலை உச்சியில் இறைவனை வணங்குப பெருமை சைவசமயத்திற்கே சிறப்பாக அமைந்ததாகும ஏனைய மார்க்கங்களில் இவ்வித வணக்க முறை கிடையாது. இத்தகைய கைலாசத்தில்கண்ணபிரானும் அருச்சுனனும் சென்று சிவபிரானே பரப்பிரம்மமாதல் தெளிந்து சிவானுபூதிகூடினர். பின் இருவகைப் பிரம இலக்கணமும் சிவபெருமானுக்குரியனவென்னுந் துதிகூறிபடய்ந்தாரென்று வியாசர் பாரதத்தல் உரைத்தார். இன்னும் நாராயணமூர்த்தி பிரமஞானம் பெற வேண்டிமைந்கத்திற் சிவபிரானைக் குறித்து அருந்தவமிருந்தார். பின் சிவபிரான் திருவருளால் பிரமஞான நிட்டையெய்தப் பெற்ருர் அக்கால காரண கற்பனை கடந்த பிரமப்பொருள் சிவபிரானே யென்னும் துதிசொற்றவாறும் உரைத்தார். வியாச முனிவர் மாபாரதத்தில் பிரமபதத்தினைச் சிவபரமாக ஒரு முகத்தினுல் உணர்த்தி அஃது சிவபிரானை உணர்த்துமாதலை இனிது புலப்படுத்தினர்.

செ. கோவிந்தசாமி அவர்கள்

சிவபிரான் திரிமூர்த்திகளையும் தொழிற்படுத்தும் துரியமூர்த்தியாவர். இன்ன இயல்பையுடையரென்று சுட்டியுணர்தற்கரிய முதல்வனுகிய சிவபிரானே பிரமசுதன் விசாலாக்கன், தானுசங்கரா உருத்திரர்கள் என்னும் பெயர்களாற் கூறப்படுகின்ருர். இதனுல் அயன, அரி இருவரிலும் பார்க்கச் சிவனுக்குக் கீழாந்தன்மையுண்டென்று அறிவிலார் பிதற்றுவர். இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய பரம்பொருள் என்று வேதாகமங்கள் முழங்கவும் சிவபிரானிடம குற்றம் சாருமென்றல் அமையாதென்க.

இனி, பாரதத்துட் போந்த கீதையில் சிவபரத்துவம் உள்ளுறையாகக் கூறப்படுகிறது. கண்ணபிரானுல் கீதையில் சிவபரத்துவம் கூறப்படுகிறது. இதனுல் அருச்சுனன் உண்மை காணமாட்டாமல் சந்தேகமுற்று வினவினுன். கண்ணபிரான் அவனுக்குத் தெளிவையுண்டாக்க அதன் பொருளை அருகிதையால் புனைந்துரைத்து பலவு தீர்த்தார் கண்ணபிரான் அருச்சுனனைப்பார்த்து அருச்சுனு! யான் பரமபுருடனைச் சரணடைகின்றேன். நீயும் விட்டின்பம் எய்துதற் பொருட்டு பரம புருடனைச் சரணடைவாய் என ஓதினர். பின்னர் "நானே" எல்லாருள்ளத்திலும் கலந்துறையும் பரம்பொருளென்று மாறுறக்கூறுதலின் அருச்சுனனுக்குக் கீதையில் ஐயப்பாடு நிகழ்தற்கு இடனுளதாயிற்றென்க! (வளரும்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
நெடுந்திவு மேற்கு
ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை
—வழக்காளி.

இல. M B/631.

எதிராக

1. நெடுந்திவு நடுக்குறிச்சி சின்னத்தம்பி விசுவலிங்கம்
2. ஷையூர் நாகமுத்து
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B/631 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1956 ஞூ ஐப்பசி மீ 27-ம் உ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா: 715/= ம். ரூபா: 500/=க்கு 9-11-55 தொடக்கம் 5-3-56 வரை 6 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா: 120/81 சதம்.

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி நெடுந்தீவுக் கோவிற்பற்று நெடுந்தீவு நடுக்குறிச்சி "சிவலைவிதானை வளவு" கிழக்குப்பாகம் பர. நீ. இல. முப்பது (பர. நீ. இல. 30) செய்பயிர் வான்பயிர்களும கிணறும். எல்லை கிழக்கு சரவணமுத்து பெண் வள்ளியம்மைக்கும் பங்காளருக்கு முரிய வாதனம், வடக்கு றேட்டு, மேற்கு கணபதிப்பிள்ளை பெண் பொன்னம்மாவிற்குரிய வாதனம் தெற்கு வேலுப்பிள்ளை பெண் தெய்வானைக்கும் நாகலிங்கம் பெண் தையல்முத்துவிற்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாயரைவாசி.

2. ஷெ நெடுந்திவு நடுக்குறிச்சி இறை "கணக்கன் கூடல்" பர. நீ. இல. இருபத்தைந்து (பர. நீ. இல. 25) பனைகளும் எல்லை கிழக்கு றேட்டு வடக்கு குருசு பெண் இராசம்மாவிற்கும பங்காளருக்குமுரிய வாதனம். மேற்கும் தெற்கும் கணபதிப்பிள்ளையின் மகள நாகமுதது விற்கும் பங்காளருக்குமுரியவாதனம். இதிற் சொரியலாய் 1/3 பாகம்.

1956ம்ஞூ புரட்டாதிமீ 1ம் உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
காரைநகர்.

M. 365 5-10-56. (து. 300)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

——

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
நெடுந்திவு மேற்கு
ஆறுமுகம் தாமோதரம்பிள்ளை
—வழக்காளி.

இல. M B/739

எதிராக

நெடுந்திவு மேற்கு
வயித்தியநாதர் இராமலிங்கம்
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B/739 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகள் 1956ஞூ ஐப்பசிமீ 26-ம் உ வெள்ளிக் கிழமை பிற்பகல் இரண்டுமணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா: 1100/= ம் ரூபா: 700/=க்கு 16-1-56 தொடக்கம் 6-3-56 வரை 8 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 207 – 57 சதம்.

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி நெடுந்தீவுக்கோவிற்பற்று நெடுந்தீவு மேற்கிறை "ஆலயம்பட்டை" பர. நீ. இல. நாற்பத்தைந்து (பர. நீ. இல. 45) செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு கீழே விபரிக்கப்படும் இரண்டாம் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு சின்னத்தம்பி பெண் நாகாத்தைக்கும் உரித்தாளர்கட்கும் மறுபேருக்கும் சொக்கநாதர் சண்முகத்திற்கும் பங்காளருக்கும் வயிரவனதர் இராமலிங்கத்துக்குமுரிய வாதனங்களும் முடிக்குரிய நிலமும். இதடங்கலிலும் சொரியலாய் 1/3 பாகமும் இரண்டு தென்னம்பிள்ளைகளும்.

2. ஷெ நெடுந்திவு மேற்கிறை "தெற்க தோம்பு" பர. நீ. இல. நாற்பத்தைந்து (பர. நீ. இல. 45) விடும், கிணறும பயிர்வகைகளும். எல்லை கிழக்கு முடிக்குரிய நிலம், வடக்கு ஒழுங்கை, மேற்கு மேலே சொல்லப்பட்ட முதலாம் ஆதனம், தெற்கு மேலே சொல்லப்பட்ட முதலாம் ஆதனம். இதில் வீடு பிறநீக்கலாக மிகுதியில் 1 6 பாகமும் அதற்குரியவைகளும்.

3. ஷெ நெடுந்திவு மேற்கிறை "வேம்படி வெளி" ஏக்கர் (4) நாலு, பேர்ச் (4) நாலு கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு முருகப்பன் பெண் செல்லததிற்கும் பங்காளருக்குமுரிய வாதனம், வடக்கும் தெற்கும் ஒழுங்கை, மேற்கு குத்தகைக காணி. இதடங்கலிற் சொரியலாய் ¼ பாகமும் அதைச் சேர்ந்தவைகளும். இன்னும் மேற்கேயிருக்கும் தோட்டமும் கிணறும்.

1956ஞூ புரட்டாதிமீ 1-ம் திகதி.

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்,
காரைநகர்,

M 366 5-10-56 (து. 300)

---

## நீர்வேலிக்கிராமச் சங்க வேலைகளின் ஒப்பந்த அறிவித்தல்

பின்னுற் காணப்படும் கிராம வேலைகள ஒப்பந்தமாகக் கொடுப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன;-

கிராமச்சங்கக் கந்தோரில் ரூபா 10 கட்டி எடுக்கும் மாதரிப் பத்திரங்களிலேயே மனுச் செய்ய வேண்டும். அப் பத்திரங்கள் 1956-ம் ஆ புரட்டாதிமீ 27-ம் உ வியாழக்கிழமை பகல் 12மணிக்கு முன் உரும்பராய் ஷெ சங்கக் கந்தோரில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கடதாசிக்கூட்டில் அடைக்கப்பட்டுக் கூட்டின் இடது மேற்பக்கத்தில் மனுப்பத்திரம் என்று எழுதி, நீர்வேலிக் கிராமச்சங்கத் தலைவருக்கென விலாசமிட்டு 1956-ம் ஆ புரட்டாதி மீ 29-ம் உ சனிக்கிழமை பகல் 10 மணிக்கு முன் ஷெ சங்கக்கந்தோரில் கிடைக்கும்படி அனுப்புக.

தெரிந்தெடுத்த கேள்விக்காரன் ஷெ சங்கத் தலைவருடன் ஒரு கிழமைக்குள் பொருத்தம் எழுதிக் கொள்ள வேண்டும். மனுப்பத்திரங்களை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ சங்கத்துக்கு அதிகாரமுண்டு.

### வேலைகளின் விபரம்

நீர்வேலி வடக்குக் கேரா வித்தை யென்னுங் கிராமச் சங்க ஒழுங்கையை அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடியிலிருந்து கிழக்குப் பக்கமாக றேட்டாகத் திருத்துகிறதற்கு ஒப்பந்தப் பத்திரம் அழைக்கப்படுகிறது.

அ. அந்நியார் அருணாசலம்
நீ. கி. சங்கத் தலைவர்.

1956-ம் ஆ புரட்டாதிமீ 20உ
M. 355 28, 5.10 56.

---

# உண்மைச் சமாதானம்

————0———— —

## சமயக் கல்வியுடன் கடவுள் வழிபாடே தரும்

வழக்கமான பரிசளிப்புவிழாப் பேச்சுக்கள் போலாகாது இன்று இன்றியமையாது வேண்டப்படும் பல ஆழ்ந்த கருத்துக்கள் பொதிந்த பேருரை ஒன்றை [illegible]ந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவிலே அரசாங்க மேற்சபை அங்கத்தவர் ஸ்ரீ ஏ. எம். ஏ. அசீஸ் அவர்கள் நிகழ்த்தினர். நீண்ட அப்பேருரையின் சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

இரண்டு உலக யுத்தங்கள் நடந்துவிட்டன. மூன்றாவது உண்டாகக் கூடிய நிலைமை ஒன்று தலைகாட்டி நிற்கின்றது. இவற்றுடன் அரசியலில் ஒரு நாட்டின் கொள்கைகளோ உலகின் பல நாடுகளின் கொள்கைகளோ ஒன்றோடொன்று மோதுதலைப் பார்க்கும் பொழுது பேச்சுக்கள் மூலமாயும் பேச்சுக்கள் மூலம் பல உண்மைகளைக் காண்டல் மூலமாயும் அகத்திலோ புறத்திலோ சமாதானம் வரமாட்டாதென்பதைக் காண்கின்றேம். இவற்றுடன், இவற்றைப் பண்புடன் கைளும் பாக்கியம் பெற்றாலன்றிச் சமாதானத்தை நாம் பெறமுடியாது.

ஞான உணர்வில்லாத அதிகாரம், சமயச்சார்பில்லாத விஞ்ஞானம், அறம் தோயாத அரசியல் ஆகியவை மக்கட் பிறப்பினரை இன்றும் என்றும் தாங்கமுடியாத துன்பத்துக்குள் அமிழ்த்திவிடும் என்பதைச் சென்ற சில கால நிகழ்ச்சிகளால் நாம் நன்கறியக்கூடியதாயிருக்கின்றது. ஸ்ரீ. கந்தையா உபாத்தியாயர் அவர்கள் தமது காலத்திலே ஒரு சமயக் கொள்கைகளுக்கும் மற்றொரு சமயக் கொள்கைகளுக்குமிடையே நடந்த மோதலைக் கண்டார். ஆனல் இக்காலத்தவராகிய நாங்கள் மற்றொரு விதமான மோதலைக் காண்கின்றேம். அது முந்தியதிலும் பார்க்கக்கூடிய அளவினதாயும் கூடிய மனக்கசப்புடையதாயுமிருக்கின்றது. அந்த மோதல் எதுவென்றால் அது ஆன்மார்த்தத்துக்கும் அதன் முழு எதிர்ப்புக்குமிடையேயுள்ளதாகும். ஆகையினலே சமயத் துறையிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களைச் சொல்லாலும் செயலாலும் நாங்கள் பரப்ப வேண்டிய பெரும் கடமைப்பாடுடையவர்களாயிருக்கின்றேம்.

நம்பிக்கையின் மறுமலர்ச்சி என்னும் பெயருடன் கலாநிதி இராதாகிருஷ்ணன் அவர்கள் அணிமையில் எழுதி வெளியிட்ட நூலிலே இன்று இன்றியமையாததாய் வேண்டப்படுவது அரசியல் சமூக பொருளாதார முன்னேற்றத்திலும் பார்க்க ஆன்மார்த்த விழிப்பு அல்லது நம்பிக்கையின மறுமலர்ச்சியேயாகுமென்று வற்புறுத்தியிருக்கின்றார். மாண்டாராய்ப் பிறந்தவர்களின் ஆராய்வில்லாச் செயல்களினலே மக்கட் பிறவி முழுதையுமே அழிக்குந் தன்மையதாகிய விஞ்ஞான வளர்ச்சியுடன் ஒன்றோடொன்று எவ்வாற்றானும் சமாதானம் பண்ணப்பட முடியாத முறையிற் பிரிந்துள்ள உலகின் இரு பகுதிகளையும் பார்க்கும்பொழுது பாவச் செயலின் பேறு சாவேயாகுமென்று நினைவூட்டப்படுகின்றேம்.

அறிவும் விவேகமும் கடவுள் வழிபாட்டின் மூலமாயே ஞானத்தையும் தூய்மையையு மடையச் செய்யும். கடவுள் வழிபாடில்லாவிட்டால் எங்கள் அறிவு முழுவதும் சூனியத்தின் பாற்பட்டதாகும்.

விவேகமுள்ளவர்களாகவும் தூய்மையுள்ளவர்களாகவும் நாமிருக்க வேண்டுமானல் பழைய நம்பிக்கையை ஆகாரமாகக்கொண்டு புதியமுறைகளை உருவாக்க வேண்டும். உலகார்த்தமானவற்றை அகற்றி ஆன்மார்த்ததை வளர்க்கும் பொருட்டு எங்கள் உள்ளங்களில் சமய உணர்ச்சி உறுதியாக இடம் பெற வேண்டும். எங்கள் வாழ்க்கைத் துறைகளின் எந்த நிலைமையிலும சரியான ஆராய்ச்சியும் தீர்மானமும் நிலவ வேண்டுமானல் எங்கள் சமுகத்தில் சமய அறிவென்பது இல்லாமல் ஒருவரேயாயினும் இல்லாத நிலைமை உண்டாதல்வேண்டும். இந்த நிலைமையை உண்டாக்குதற்குக் கல்வி நிலையங்களே வேறெந்த வழிகளிலும் பார்க்கச் சிறந்த சாதகமானவையாய் விளங்குகின்றன. இத்துறையில் இலங்கை மக்கள் மிகுந்த விழிப்புடையவர்களாயிருந்து எங்கள் கல்விச் சட்ட அமைப்பிலே சமயக் கல்விக்குத் தகுந்த இடம் கொடுத் திருக்கின்றார்கள். இப்பொழுது நான் பேசிய பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் குறிப்பாக மாணவர் இன்பம் பெறுது வருந்தியிருக்கலாம். ஆனல் ஏனையோர்போலவே அவர்களும் இத் தொடர்பில் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவர்களாகின்றார்கள்.

———

## கண்ணைக் கட்டியா பந்தய ஓட்டம்?

———

முஸ்லிம்கள் சிங்களத்தை ஏற்பது விவேகமற்ற செயலாகும. வானெலிப் பகுதி மந்திரி ஸ்ரீ மரைக்காயர் ஸ்ரீ இலங்கரத்தினவுக்கு அளித்த வரவேற்புக்கூட்ட மொன்றிற் பேசும்போது 2500 வருட காலச் சரித்திரப் பெருமை வாய்ந்த சிங்கள கலாசாரங்கள் முதலியவற்றை அறிதற்கு எல்லா முஸ்லிம்களும் சிங்களம் படிக்க வேண்டும் என்ற மதியுரை ஆதரமற்றதாகும். இதனல் எங்கள் முன்னேற்றம தடைப்படும். மலைநாட்டு முஸ்லிம்களுக்குள்ளேயே 25 சத வீதமானேருக்குப் போதிய சிங்கள அறிவில்லை. 180 வருட பிரித்தானியர் ஆட்சியில் 6.5 வீதமான இலங்கையர் மாத்திரம ஆங்கிலம் கற்றுள்ளனர். முஸ்லிம்கள் சிங்களத்தைக் கற்றுச் சிங்களவரோடு முன்னேற 200 ஆண்டுகளாயினும் செல்லும. ஆகையால் இவ்வுண்மையை உணராது முஸ்லிம்கள் சிங்களத்தை ஏற்பது கண்ணைக் கட்டிக் கொண்டு பந்தய ஓட்டத்திற் கலந்துகொள்வதுபோலாகும் என்று அட்டாளைச் சேனையிலே ஸ்ரீ சினிமுகம்மது பேசும்போது கூறினர்.

## அரசாங்க உத்தியோகத்தரின் புதிய நிலைமை

———

ஆங்கில மொழியிலேயே அரச கருமங்கள் பொதுவாக நடைபெறுமென்ற கொள்கையின்படி அரசாங்கத்தில் உத்தியோக மேற்று இன்று கடமையாற்றுவோரின் நிலைமை பலவாறு பாதிக்கப்பட்டிருக்கின்றது என்னுங் கருத்துத் தமிழ் மக்களிடையிற் பரவி யிருக்கின்றது. முதல்மந்திரிமுதல் பல அரசாங்க அதிகாரிகளிட மிருந்து இத்தொடர்பில் விளக்கங்கள் வெளிவந்துகொண்டேயிருக்கின்றன.

## அரசியல் அலை

———

1-ம் பக்கத் தொடர்ச்சி

ளச்சட்டம் கொண்டு வந்த சர்வசிங்களமயமந்திரிசபை அங்கத்தவருக்குத் தனிச் சிங்களம் அரியாசனம் அமரத் தமிழ் அடிமையாளர் மொழியாக வந்த ஆபத்து நிலவும் நாட்டில் ஆபத்துக்குள்ளானவர்களில் யார் யார் மந்திரியாரை வரவேற்றனர், மாலைசாற்றினர், நடனம் ஆட்டுவித்து நடனம் ஆடினர் என்ற ஆராய்ச்சி என்பதே.

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளுதலைக் கட்சிக் கொள்கைக்குப் பின்னுக வைத்து உள்நாட்டு மந்திரிக்கு முன்னுக நின்று உபசரணை கூறிய சம்பவமும் குறிப்பிடத்தக்கது. அரசியல் அரங்கில் இனிமேல் ஆட்டத்திற்கிடம் இராதென்று எண்ணிக் கொண்டவர்களும் பாட்டுப் பாடி ஆட்டம ஆடி வரவேற்பு நிகழ்த்துவதை ஆமோதிப்பது நூதனமல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

———

# கட்சிஆட்சியில்உறுப்பினர்நிலைமை

## மக்கள் அரசாங்கத்தில் மக்களின் முதற் கடமை

ஒழுக்கமின்றிப் பண்பாடென்பதொன்றில்லை. அப்படியொன்று நினைக்க முடியாது. சட்ட ஒழுங்கு நடைபெறுதற்கு ஒழுக்கம் இன்றியமையாதது. மக்கள் நலனுக்காய் நடைபெறும் அரசாங்கங்கள் சிறப்புறுதற்கு இக்குணநலன் மக்களிற் பெரிதும் வேண்டப்படுகின்றது என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ பி. இராசகோபாலன் அவர்கள் அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தாபகர் நினைவுநாள் விழாவிற் பேசும்போது கூறினர்.

அவர் மேலும் பேசும்போது பின்வருமாறு கூறினர். எந்த விதமான ஆட்சி வசதி காரணமாயோ நீதி திறமை காரணமாயோ நீதிமன்றங்களின் ஆணை வலியைக் குறைக்கக்கூடாது. மக்கள் வருத்தமின்றி நீதிமன்றங்களில் நீதி பெறுதற்குப் பாராளுமன்றம் எவ்வித இடைஞ்சலும் உண்டாக்கக்கூடாது.

சட்டத்தையும்அதிகாரத்தையும் சீராகக் கையாளுதலே ஒரு அரசாங்கத்தின் சிக்கலாயிருந்து அதை நீக்கும் வழி என்னவென்றால் அதிகாரமானது சட்டத்தின்கீழ் அமைதலேயாகும் என்று நான் கருதுகிறேன். மக்களாவார் அரசாங்க அதிகாரத்தின் கீழ் அமைந்து நடக்கவேண்டும். அவ்வாறு நடத்தலை ஆராய்ந்து பார்த்தால் அது சட்டத்தின்கீழ் அமைதலேயாகும்.

ஒரு அர்சாங்கத்திலே எவர் ஒருவருக்காயினும் சட்டத்துககமையாத விசேட உரிமைப் பதவி கொடுக்கக் கூடாது. ஒரு நாட்டின் அரசியல் அமைப்பே அந்நாட்டின் சட்டங்களெல்லாவற்றிலும் மேலானதாகின்றது. அது மக்களையும் பாராளுமன்றங்களையும் ஆட்சிப் பகுதிகளையும் நீதிமன்றங்களையும் ஒரேவிதமாய்க் கட்டுப்படுத்துகின்றது. மற்றச் சட்டங்களும் அவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. சட்டத்தின்கீழ் அமைந்து நடத்தல் தொன்றுதொட்டுள்ள எங்கள் பிறப்புரிமையாகும். ஆனல் அதன் பெருமை பிருத்தானியருக்கு இன்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. விசேடமாய் இக்கால மக்கள் அரசாங்கத்திலே, சட்டத்தின்கீழ் எம்மவர் அமைந்து நடத்தல் பற்றி ஆட்சிப்பகுதிமிக நுணுககமாய்க்கவனிக்கப்படவேண்டும்.

சட்டத்துக்கும் அரசாங்கத்துக்குமிடையிலுள்ள தொடர்பு சட்டத்துக்கும் அதிகாரத்துக்குமிடையில் உள்ள சிக்கலுடன் பரந்து ஒன்றுபட்டிருக்கும். ஆனல் சட்டத்தையும் அதிகாரத்தையும் இணைத்து ஒழுங்குபடுத்துதல் வேறு எந்த வழிவகைகள் இருந்தபோதிலும் நீதித் துறைக் கட்டுப்பாடில்லாமல் நிறைவேற்ற முடியாது.

இன்று இந்தியாவிலே நீதிமன்றங்களின் மூலம் நீதித்துறைக் கட்டுப்பாடு மற்றெல்லாவற்றிலும் மேலானதாய் வேண்டப்படுகின்றது. உள்நாட்டு அரசாங்கங்களும் மத்திய அரசாங்கத்திலும் அதிகாரத்தைக் கைப்பற்றிய அரசியற்கட்சி வெளி நாட்டு ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டியமுறையிற் பிணிக்கப்பட்டுள்ளது.

அரசியற்கட்சி ஒன்றைச் சேர்ந்த ஒரு அங்கத்தவர் தமது அபிப்பிராயத்தை ஓர் சட்ட சபையிலே சுதந்திரமாக உபயோகிக்க முடியாது. அதே சமயத்தில் பெரும்பான்மையான அதிகாரக் கட்சிக்குத் தகுந்த வலியுடைய எதிர்க் கட்சியுமில்லை. மிகுந்த விபரமாய் எழுதப்பட்ட சமட்டிக் குடியரசியலொன்றிருந்தபோதிலும் ஐக்கிய அமெரிக்காவின் பாராளுமன்றமில்லாத் தலைவர் ஆட்சி முறையிலும் ஆங்கிலேய பாராளுமன்றஆட்சி முறையே விரும்பப்படுகின்றது. இது அதிகாரசபையின் ஆணைக்குள் சட்ட சபையைக் கொண்டு வருகின்றது. சனநாயகம் சித்தியடைவதற்கு எதிர்க்கட்சியின் எண்ணத்தையும் பயன்படுத்துதலே தகுந்ததாயிருந்தபோதிலும் அதிகார கட்சிக்குள்ள பெரும்பான்மை வாக்குப் பலத்தால் எதிர்க் கட்சியினரின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து அதைக் கையாளுதல் சாத்தியமாகக் காணப்படவில்லை. அதிகாரக் கட்சியைச் சட்ட வரம்புக்குள் நிற்கச் செய்யும் பொறுப்புக் கடைசியாய் ஒரு நாட்டின் நீதிமன்றங்களில் தங்கியுள்ளது. இத் தொடர்பில் மக்களுக்கு வேண்டப்படும் பாதுகாப்பு அரசியலமைப்புச் சட்டத்தின் 32ம், 226ம் உறுப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

எங்களுடையது போன்று மக்கள் நலனுக்காயமைந்த ஓர் அரசாங்கத்திலே நாட்டுச் சட்டத்தின் பெரும் பகுதி வழக்கமான நீதிமன்றங்களாலல்ல அரசாங்க அதிகாரத்தையுடைய ஆட்சிப் பீடங்களாலேயே கையாளப்படவேண்டியதாயிருக்கின்றது. மக்களாட்சியிலே சட்டத்துக்கும் அதிகாரத்துக்குமிடையில் வெல்ல முடியாத இடைஞ்சல்களிருக்கவில்லை. சட்டத்துக்கு மதிப்பும் சட்டத்துக்கமைந்த அதிகாரத்துக்கு மதிப்பும் சட்டஆட்சிக்கு உறுப்புக்களாயமைகின்றன. மக்களையும் மக்களைப்போலவே ஆட்சி அதிகாரத்தையும் சட்டம் கட்டுப்படுத்துகின்றது. அரசாங்கத்திலமைந்துள்ள பல அதிகார வழிகளுள் ஆட்சிப் பகுதி ஒன்றாயிருக்கின்றது. சட்டத்துக்கும் அதிகாரத்துக்குமிடையிலுள்ள தொடர்பே மக்களாட்சியிலுள்ள ஓர் சிக்கலாயிருந்தால் அதை நீக்கும் வழி நான் நினைக்கின்றபடி அதிகாரம் சட்டத்தாற் கட்டுப்படுதலேயாகும். அரசாங்க அதிகாரத்துக்குள் மக்கள் அடங்குதல் வேண்டும்; ஆராயப்படும்பொழுது அதுசட்டத்துக்கமைதலேயாகும். சட்டத்துக் கமைதலும் சட்டத்தைக் கையாளும்அதிகாரத்துக்கமைதலும் மக்களின் முதற் கடமைகளுள் வருகின்றன. ஒருவர் தமக்கு முன்புள்ள சட்ட ஆட்சிக்கமைதலே தமது வாழ்க்கைச் சட்டமாகக் கொண்டால் அத்தகைய வாழ்க்கையை நடத்தத்தக்கவாறு தம்மைத் திருத்திக் கொள்ளுதல் வேண்டும். சர்வகலாசாலை விதிகளுக் கமைதல் வேண்டும். சர்வ கலாசாலை ஆட்சியினருக் கமைதல் வேண்டும். சர்வகலாசாலைச் சட்டங்களுக்கமையத் தம்மை வைத்துக் கொள்ளுதல்சர்வகலாசாலை ஆட்சியினரின் கடமையாகும். ஒழுக்கமென்பது சர்வகலாசாலைச் சூழலின் ஓர் உறுப்பாயமைகின்றது. அஃதே சர்வகலாசாலையிலுள்ளோரின் சீவநாடியாயமைய வேண்டியது. தன்னடக்கமில்லாத பண்பாடென்பது நினைக்க முடியாததொன்றாகும்.

---


### யாழ்ப்பாணம்
# ஜக்கிய இலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா

**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

**S. கனகசபை**

சிறுப்பர்

Std 14


### அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கில் இருக்கும் செ. வீ, கனகசபை அவர்கள் கடையில் 16-3-53 முதல் 28-6-55 வரைக்கும் அடைவு வைத்து மீட்கப்படாத தவணை தப்பிய நகைகளை 1956 ம் ஹு ஐப்பசி மாசம் 27ம் திகதி சனிக்கிழமை மேற்படியார் கடையில் காலை 10-30 மணிக்கு என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்
கொம்மிஷனர்.
1-10-56

M 364-5, 12-10-56

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு கந்தையா செல்வராசாவும் பெண் லீலாவதியும் வழக்காளிகள்

இல. M B 640.

எதிராக

வண்ணார்பண்ணை கிழக்கு கந்தர்மடம் தம்பு சபாரத்தினமும் பெண் மங்கையர்க்கரசியும் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 640ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956 ஹு கார்த்திகை மீ 27 உ செவ்வாய்க்கிழமை பிற் பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 23862/-ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் 2000 க்கு 8வீத வட்டி, 12-11-55 தொடக்கம் 1-3-56 வரைக்கும் அதன்மேல் முழுத் தொகைக்கும் 1-3-56 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 345 47.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக்கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை 'நீர்நொச்சியடி' பர நிலை,இலா, 9 குழி 8 இதில் ஒழுங்கைக்குவிடப்பட்ட நிலம் பிற நீக்கலாகவும் மிகுதியாயுள்ளதில் தெற்குப் பக்கமாக பர நில இலா, 4 குழி 10¼, கல்வீடும் கிணறும் வான்பயிர்களும் செய்பயிர்களும் எல்லை கிழக்கு ரேட்டு. வடக்கு முத்தித்தம்பி பெண் மகேஸ்வரியின் ஆதனம் மேற்கும் தெற்கும் கை ஒழுங்கை. இதடங்கலும் வடக்கெல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உருத்தும். D. 191/202 புஸ்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

சே. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

51, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
1-10-56.

M 363 5-10- (து 200)


உ

வெளிவந்துவிட்டது

# தஞ்சைவாணன் கோவை

சொக்கப்ப நாவலர் உரை

(இரண்டாம் பதிப்பு)

**வித்துவான் ந, சுப்பையபிள்ளை**

அவர்களால்

திருத்திப் புதுக்கி அமைக்கப்பெற்றது.

அதிபர் சைவப்பிரகாச யந்திரசாலையிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா: 6-00


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர் வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு, சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 5 10-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.